# இந்திய முரசுகளின் உலகம்

## தெரியுமா?

வெவ்வேறு இந்திய இனக் குழுக்களின் கலாசாரக் கொண்டாட்டங்களிலும் நிகழ்ச்சிகளிலும் தாள வாத்தியங்கள் பெரிய பங்கை வகிக்கின்றன. இவை சிங்கப்பூரில் நடைபெறும் நிகழ்ச்சிகளிலும் கொண்டாட்டங்களிலும் பயன்படுத்தப்படும் சில இசைக்கருவிகள் ஆகும்.



### 1. மிருதங்கம்

இது தென் இந்தியாவிலுள்ள தமிழ்நாட்டிலிருந்து வந்த முரசு. இந்திய இசையின் ஒரு பாணியான கர்நாடக இசையில் இது அதிகம் பயன்படுத்தப்படுவதுண்டு. சிங்கப்பூர் இந்தியர்களின் முன்னோர்கள் பலர் தென் இந்தியாவைச் சேர்ந்தவர்கள்.



### 2. தப்லா / இணை கைம்முரசு

இணை கைம்முரசு வட இந்தியாவிலிருந்து வந்தது. இந்துஸ்தானி இசையில் இது அதிகம் பயன்படுத்தப்படுகிறது.



### 3. டோல்

இது பஞ்சாபியர்களின் நாட்டுப்புற இசையில் பயன்படுத்தப்படும் ஒரு முரசு ஆகும். பங்கரா நிகழ்ச்சியின்போது இந்த முரசொலியை நீங்கள் கேட்டிருக்கலாம்.



### 4. பறை

இது தமிழ்நாட்டிலிருந்து வந்த ஆகப் பழமையான முரசுகளில் ஒன்று. மக்களுக்குச் செய்தி தெரிவிக்கவும் ஆபத்து குறித்து எச்சரிக்கவும் இந்த முரசு பயன்படுத்தப்பட்டது. இந்த இசைக்கருவி, கோவில் திருவிழாக்களிலும் இறுதிச் சடங்குகளிலும்கூட பயன்படுத்தப்பட்டது.

# கையடக்க முரசை செய்தல்

டமரு இசைக்கருவி, மணற்கடிகாரம் வடிவில் இருக்கும். அது அசைக்கப்படும்போது, ஓட்டுப்பகுதியில் இணைக்கப்பட்ட கயிறு அதன் தலைப் பகுதிகளில் மோதும். இந்து சமயத் தெய்வங்களில் ஒன்றானவர் சிவன். அவர் டமருவைத் தன்னுடன் வைத்திருந்தார் என்று கூறப்படுகிறது. இந்த டமருவை நீங்கள் செய்துபாருங்கள்.



## தேவையான பொருள்கள்



**1.** ஒரே அளவிலான 2 காகித கிண்ணங்கள்




**2.** வெள்ளை பசை / கைவினை பசை



**3.** கத்தரிக்கோல்

**4.** கைவினை காகிதம் (200gsm) / அட்டை



**5.** சாயம் மற்றும் தூரிகை



**6.** அடர்த்தியான நூல் / கயிறு (பாசி மணியின் துளைகளுக்குள்ளே செல்லக்கூடிய நூலைப் பயன்படுத்துங்கள்)



**7.** துளைகள் கொண்ட 2 பிளாஸ்டிக் மணிகள்



**8.** விருப்பப்பட்டால்: அலங்காரப் பொருள்கள்

**1.**



கிண்ணத்தின் பெரிய முனையைக் காகிதத்தின் மேல் வைக்கவும். அதைச் சுற்றி 2 வட்டங்கள் வரையவும். அந்த வட்டங்களைத் தனியாக வெட்டி எடுக்கவும்.

**2.**



வட்டங்களைக் கருப்பு வண்ணத்தில் சாயம் பூசவும்.

**3.**



விருப்பப்பட்ட நிறத்தில் கிண்ணங்களின் வெளிப்பகுதியை வண்ணம் தீட்டவும் அவற்றை சில மணி நேரம் காயவிடவும்.

**4.**




காகித கிண்ணத்தின் விளிம்பில் பசையைத் தடவவும். வெட்டி வைத்திருந்த வட்டத்தைக் கிண்ணங்களின் விளிம்பில் ஒட்டவும். மற்றொரு கிண்ணத்தை வைத்து அதேபோல் செய்யவும்.

**5.**



முரசின் நடுப்பகுதியைச் சுற்ற முடிந்த நீளத்திற்கு நூலை/கயிற்றை வெட்டவும். முரசின் தலைகளில் முன்னும் பின்னும் மோதும் அளவுக்கு நூல்/கயிறு நீளமாக இருக்கவேண்டும். அடுத்து, நூலை/கயிற்றை பிளாஸ்டிக் மணியின் துளைக்குள் விடவும். நூலின்/கயிற்றின் ஒவ்வொரு முனையிலும் ஒரு முடிச்சு கட்டவும்.

**6.**



நூலை/கயிற்றை முரசின் நடுப்பகுதியில் கட்டவும்.

**7.**



இறுதியாக, வீட்டில் இருக்கும் பொருள்களை வைத்து முரசை. உங்களுக்குப் பிடித்தபடி அலங்கரித்துக்கொள்ளுங்கள். முரசொலி எழுப்புங்கள்! முரசை நடுவில் பிடித்தவாறு அதை முன்னும் பின்னும் அசையுங்கள். மணிகள் முரசின் தலையில் மோதி ஒலி எழுப்பும்.

1 Esplanade Drive, Singapore 038981 | Customer Experience Hotline: 6828 8377

No part of this material may be reproduced in any other form without permission from The Esplanade Co Ltd.

esplanade
theatres on the bay
singapore

Esplanade is a charity and not-for-profit organisation. Help us bring the joy and inspiration of the arts to different communities, including the underserved.

www.esplanade.com EsplanadeSG EsplanadeSingapore #esplanadesg #mydurian